


ஈரோடு தெற்கு மாவட்டம் பெரியார் நகர் பகுதி கழக செயலாளர் அக்னி சந்துரு ஏற்பாட்டில் பெரியார் நகர் அ.தி.மு.க. முன்னாள் மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி மற்றும் அ.தி.மு.க. வட்டக் கழகச் செயலாளர் குமாரவேலு தலைமையில் 50க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அக்கட்சியிலிருந்து விலகி மாவட்டச் செயலாளரும் , அமைச்சருமான சு.முத்துசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். நிகழ்வில் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அமைச்சர்கள் கீதாஜீவன் – டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில்

# கரூரில் ‘தொலைநோக்கு சிந்தனையாளர் கலைஞர்’ – கருத்தரங்கம்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி சிறப்புரை!



கரூர், நவ. 7 -

கரூர் மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு ‘தொலைநோக்கு சிந்தனையாளர் கலைஞர்’ எனும் கருத்தரங்கம் கரூர் அட்லஸ் கலையரங்கில் நடைபெற்றது. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி சிறப்புரையாற்றினார். சமூக நலம், மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசுகையில், கலைஞர் கிட்டத்தட்ட 75 ஆண்டுகள் அரசியலில் மட்டுமல்லாமல் சமூக பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்திருக்கின்றார்கள். பொதுமக்களின் எதிர்காலத்தை கொண்டு சிந்தித்து ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்தவர். அவசர கால கட்டத்தில் ஜனநாயகத்திற்குஆபத்துவருகின்றதோ அப்போதெல்லாம் முதல் குரலாக அங்கே தலைவர் கலைஞர் அவர்கள் குரல் தான் ஒலித்துக் கொண்டு இருக்கும். பல்வேறு கலவரங்கள் வந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். எல்லா மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கு ஒரு பெரிய சிற்பியாகவும், சிந்தனையாளராகவும் செயல்பட்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான். ஐந்து முறை முதலமைச்சராக இருந்திருக்கின்றார்கள். பல்வேறு திட்டத்தை தீட்டி இருக்கின்ற பொழுதெல்லாம். கடந்த காலத்தையும் சிந்திக்க வேண்டும். நிகழ்காலத்தையும் பார்க்க வேண்டும் நமக்கு எதிர்காலம் யார் மக்களுக்கு நன்மையை செய்வார்கள் என்று எதிர் நோக்கி பார்க்க வேண்டும்.

இளைஞர்களாகிய நீங்கள். நாம் அனைவரும் இவ்வளவுதூரம் கல்வி கற்றத்திற்கு முக்கிய காரணமானவர் பெருந்தலைவர் காமராஜர் மற்றும் கலைஞர் அவர்கள் தான். ஆனால் கடந்த காலங்களில் கிராமப்புறங்களில் ஐந்தாவது வகுப்பு வரை குழந்தைகளை படிக்க வைத்து விட்டு வீட்டில் இருந்து கொள்வார்கள். அதற்கு மேல் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து விடுவார்கள். அந்த கால கட்டங்களை மாற்றி பெண்கள் கல்வி பயில வேண்டும் அதுவும் எட்டாம் வகுப்பு வரை கண்டிப்பாக

படிக்க வேண்டும் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் பெண்களுக்கு திருமணத்திற்கு 5000 உதவித் தொகை தருவேன் என நாட்டிலேயே முதன் முதலாக வழங்கி படிக்க வைத்தவர் கலைஞர். வீடு இல்லாதவர்களுக்கு கலைஞர் ஆதிதிராவிடர் நலத்துறை சார்ந்த அவர்களுக்கு 1 இலட்சம் வீடுகளை 1969 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முதலாக கட்டிக் கொடுத்தார்கள். நகரங்களில் குடிசையில் வாழும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தார்கள். அதே போல் 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன் முதியோர்களுக்கு தன்னம்பிக்கையுடன் இருப்பதற்காக மாதம் ரூ.1000 உதவி தொகையினை வழங்கியவர். அனைத்து நபர்களுக்கும் சொந்தமாக குடியிருப்பதற்காக இடமில்லாதவர்களுக்கு அல்லது புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு 2006 ஆம் ஆண்டில் சட்டசபையில் வாக்குறுதி அளித்தது போல் உடனடியாக இலவசமாக வீட்டுமனை பட்டாவினை வழங்கினார்கள்.

பள்ளிச் சென்று படிப்பதற்கு இலவசப் பேருந்து, உதவித் தொகை போன்ற எண்ணற்ற திட்டங்களை கலைஞர் வழங்கினார். மதிய உணவு திட்டம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதனை தொடர்ந்து விரிவுபடுத்தி மதிய உணவில் முட்டை வழங்கினார்.

தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் இன்றைக்கு முதலமைச்சர் தளபதி அவர்கள் பொதுமக்களுக்கு எண்ணற்ற திட்டங் களை வழங்கிக் கொண்டே வருகின்றார்கள். ஆக தலைவர் அவர்களுடைய வரலாறை படித்தாலும் கதைகள், கட்டுரைகள். இலக்கியங்கள் போன்ற எண்ணற்ற உரைகள் எழுதிஇருக்கின்றார்கள். சிந்தனைகளை வளர்த்துக்கொண்டு குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் வாழ்க்கையில் மென்மேலும் வளர வேண்டும் என்றார்.

தொடர்ந்து தொலைநோக்கு சிந்தனையாளர் கலைஞர் மையக்கருத்து பாடலினை.

அமைச்சர் ஐ.பெரியசாமி வெளியிட அமைச்சர்கள் கீதா ஜீவன், முனைவர். டி ஆர் பி.ராஜா பெற்றுக் கொண்டார்கள்.

இக்கருத்தரங்கில் முதன்மைச் செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பி.செந்தில்குமார். நீதியரசர் ஜி.எம்.அக்பர் அலி(ஓய்வு). மாநில சிறுபான்மை ஆணையம் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல், சமூகநீதி கண்காணிப்பு குழு தலைவர் .சுப.வீரபாண்டியன். கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள்

இரா.மாணிக்கம் (குளித்தலை) ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராய புரம்), கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, துணை மேயர் ப.சரவணன், நாஞ்சில் சம்பத், கவிஞர் ரவி சுப்ரமணியன், கவிஞர் மனுஷ்யபுத்திரன், மண்டல தலைவர் கனகராஜ், கல்லூரி மாணவ, மாணவியர், உள்ளாட்சி பிரதிநிதிகள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. வேல்சாமி

### நவம்பர் 7 (2007)



இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைக் கழகங்களை அமைத்தவர்.

மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# பாலஸ்தீனத்தின் கடைசிக் குடிமகன்...

பாலத்தீனத்துக்குள்
பசி நுழையலாம் பட்டினி நுழையலாம்
அதைத் தீர்க்கும்
உணவுக்கு அனுமதி கிடையாது.
பிணி நுழையலாம் வலி நுழையலாம்
அதை நீக்கும்
மருந்துக்கு அனுமதி கிடையாது.

அங்குப்
பகல்கள் வரலாம்;ஆனால்
இரவின் கட்டளைப்படி
நடக்க வேண்டும்.
மரணம் மட்டுமே
எந்த நேரத்திலும் வீதிகளுக்குள்,
வீடுகளுக்குள்
வரலாம்
விருப்பம்தீரப்
பைகளை நிரப்பிக்கொண்டு
திரும்பலாம்.

மத்திய தரைக்கடல்கூட
இசுரேல்
கறுப்புச்சட்டம் போட்டால்
அதற்குக்
கட்டுப்பட்டு ஓடையாகிவிட வேண்டும்.

இதோ!
பிணந்தின்னி
அலுமினியக் கழுகு
உயிர்களைக் கொத்திப்போக
வானில் வந்துவிட்டது

சிறுவன்
பந்தோடு வந்துநிற்கிறான்
வந்து தெருவில், திடலில்
நேற்றுவரை அவனோடு விளையாடிய
பாலர்பட்டாளத்தைக் காணோமே!
வானத்தோடு
பேசிக்கொண்டிருந்த மாடமாளிகைகள்
எலும்புகள் நொறுங்கித்
தசைகள் பிதுங்கிச்
சரிந்துவிட்டனவே!
விளையாட்டு
வேளைகள் குருதி கொட்டியதால்
காஸா பூமி
கலங்கித் துடிக்கின்றது.

அம்மா இல்லை
அப்பா இல்லை
உடன்பிறந்த அக்கா அண்ணன்
தம்பி தங்கை யாருமே இல்லை
இல்லைகளின்
மொத்தத் தொகையில் மிஞ்சி
என்ன
இருக்கிறது?





தவிப்பு, தடந்தெரியாப் பாதை,
விம்மல், விளக்கில்லா இருள்,
துயரம்,துடைக்கும் விரல்கள்இல்லாத்
தனிமை;
இவை....இவை மட்டுமே இருக்கின்றன.

விளையாட்டு
வெண்கரடிப் பொம்மை மட்டும்
இருக்கிறது
அதுவும்
தான் அழுதால்
தாங்கமாட்டாமல்
அவள் அதிகம் அழுவாளே என்று
அழுகையை
அடக்கிக்கொண்டு இருக்கிறது.

பேசினால்
துயரம் பிரளயமாய்ப் பெருகிவிடுமே
என்று
வார்த்தைகளை வெளிவிடாமல்
அந்தப் பொம்மை
பேசாத பொழுது பிணம் சுமந்து
கூடவே நிற்கிறது.

ஒதுங்க இடமில்லை
பதுங்க குழிகள் இல்லை
ஆதரவற்றவராய்ப் பிடிபட்டோர்
அடைக்கப்பட்ட
அகதி முகாம்கள்மீது இசுரேல் படை
தாக்குகிறது.

இந்தநொடி வரலாம்
அடுத்தநொடி வருவதற்குள் வரலாம்
தலைமேல் வந்து
விழலாம் வெடிகுண்டு என்பதனால்
குழந்தைக்குமுன் மடிய
இந்தப்பொம்மை கூடவே இருக்கிறது.

பாலத்தீனத்தின்
கடைசிக் குடிமகனாக
மடியப்போவது
இந்தக் குழந்தையா?
இல்லை
இதன் கையில் உள்ள
இந்தப் பொம்மையா?



கவிப் பேரருவி
ஈரோடு தமிழன்பன்